கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை


4-8-1974

50 காசு



தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...







உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

■

கோகுலம்

மலர் 3 □ இதழ் 9

ஆகஸ்டு 4, 1974

ஆனந்த, ஆடி, 19

■

தனிப்பிரதி: 50 காசு

சந்தா விவரம்:

உள் நாடு:

ஒரு வருடம் ரூ. 13-00

ஆறு மாதம் ரூ. 6-50

வெளி நாடுகள்:

ஆண்டுச் சந்தா ரூ. 25-00

மானேஜர்:

கோகுலம்

கல்கிப் பூங்கா, சென்னை-600031




அட்டையில்:

மழை மின்னல் இடிபற்றிக்
கதை எழுதச் சொன்னால்

மலையன்ன குடைபிடித்து
மாயன்போல் நின்றார்

வண்ணப்படம்:
திலீப் பானர்ஜி



பிள்ளையார் பெருமை

திருமுருக கிருபானந்தவாரியார்

மைலதல நாட்டில் கண்டக நகரத்தில் சக்கரபாணி என்ற அரசன் செங்கோல் தாங்கி அரசு புரிந்தான். இவன் மனைவி உக்கிரை. இவர்களுக்கு மக்கள் பிறந்து பிறந்து இறந்து விட்டனர். இதனால் சக்கரபாணி துக்கமடைந்தான்.

சவுனக முனிவர் அவனிடம் வந்து, அவனுடைய மனக்குறையைத் தெரிந்து கதிரவனுடைய மந்திரத்தை உபதேசித்து, கதிரவனை உபாசிக்குமாறு கூறிச் சென்றார். சக்கிரபாணி தன் மனைவியுடன் கதிரவனுடைய விரதத்தை அனுஷ்டித்தான். ஆதித்தபகவானின் அருளால் உக்கிரை கருவுற்றாள்.

உக்கிரை ஒரு மகனைப் பெற்றாள். மூன்று கண்களும், சிவந்த சடைகளும் படைக்கலம் ஏந்திய கரங்களும் உடையவனாய் அவன் தோன்றினான். அம்மகனுடைய உடம்பில் இருந்து பேரொளி பரவியது. அவனைக் கண்டு அனைவரும் அஞ்சினார்கள். வருணன் அந்தண வடிவில் வந்து அவர்களைக் கண்டு ஆறுதல் கூறி, சிந்து நதிக் கரையில் பிறந்ததனால் சிந்து என்று பேர் சூட்டினான். சிந்து இனிது வளர்ந்தான். அற்புதம் அற்புதமாக விளையாடினான். அசுர குரு சுக்கிரர் அவனுக்கு அருமறைகளைக் கற்பித்தார்.

''சிந்துவே! நீ சிவபெருமானை நோக்கித் தவம் செய்து அரிய வரங்களைப் பெறுவாய். அமரர்களை அடக்கி அசுரர்களுக்கு நன்மை செய். உன் வாழ்வு சிறக்க'' என்று வாழ்த்தி விட்டுச் சென்றார்.

சிந்து காட்டுக்குப் போய் வலக் கால் பெரு விரலை ஊன்றி, இடக் காலை வலக் காலின் முழங்காலில் முடக்கிக் கரங்களைக் கூப்பி, பொறி புலன்களை அடக்கிச் சிவபெருமானைத் தியானித்து ஈராயிரம் ஆண்டுகள் உக்கிரமான தவம் செய்தான்.

சிவபெருமான் அவனுடைய தவத்துக்கு இரங்கி அவன் முன் தோன்றினார். ''உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்'' என்றார். சிந்து சிவபெருமானைத் தொழுது, ''எம்பெருமானே! எதனாலும் அழியாத உடம்பும், பிரமாதி தேவர்களை வெல்லுந்திறமும், மூவுலகங்களின் ஆட்சியும் மாட்சியும் தந்தருள வேண்டும்'' என்று வரம் இரந்தான். சிவபெருமான் ''விநாயகரை யன்றி யாரும் உன்னை வெல்ல முடியாது. மற்ற எல்லா வரங்களையும் தந்தோம்'' என்று கூறி மறைந்தார்.

சிந்து கண்டக நகரத்தை அடைந்தான். தந்தையாகிய சக்ரபாணி, மகன் பெற்ற வரங்களை அறிந்து மகிழ்ந் தான். மகனிடம் அரசியலை ஒப்புவித்தான். சிந்து, மித்திரன், கவுத்துவன் என்ற இரு அமைச்சர்களைக் கொண்டான்.

திசைகள் தோறும் படையுடன் சென்று தன்னை வணங்காத மன்னர்களை மாய்த்து, வணங்கினவர்களை வாழ்வித்து, அவர்கள் தந்த கப்பங்களுடன் நில உலகம் யாவும் தன்வசப்படுத்தினான்.

கதம்பாசுரன், சம்பாசுரன், கனலாசுரன், கோலாசுரன் என்ற நான்கு



அசுரர்களைப் படைத் தலைவர்களாகச் செய்தான். தன்னை எதிர்த்த கம்பாசுரன்,' நிகம்பாசுரன், காலாசுரன் முதலிய அசுரர்களைப் போர் புரிந்து அடக்கினான்.

விண்ணுலகம் சென்று இந்திராதி தேவர்களை வென்று அங்கங்கே அசுரர்களை இருத்தி ஆட்சி புரியச் செய்தான். திருமாலுடன் போர் புரிந்து வென்று, இந்திரன் திருமால் முதலியவர்களைச் சிறையிலிட்டான். நாராயணர் முதலிய அமரர்கள் சிறையில் இருந்து கொண்டே விரதம் இருந்து விநாயகரைத் துதி செய்தார்கள்.


விநாயகர் தேவர்கள் துயர் தீர்க்கத் திருவுளங்கொண்டு உமாதேவியாரிடத்தில் ஒரு மகவாகத் தோன்றினார்.

சிந்துவுக்குப் பல அபசகுனங்கள் தோன்றின. உதிர மழை பொழிந்தது. இடத் தோளும் இடக் கண்ணும் துடித்தன. கோபுரங்களில் ஆந்தைகள் கூவின. சிந்து ராசன் அது கண்டு சிந்தை நொந்தான்.

கிரிச்சயத முனிவர் விநாயகரிடம் போய் அவருக்குப் பொன்னுடை போர்த்தினார். மரீசி முனிவர் விநாயகரைப் போற்றி தேவர்கள் முனிவர்கள் துயர் தீர ஒரு கவசத்தை உண்டாக்கி, ''இதனைப் பாராயணம் செய்யுங்கள். கவலை நீங்கும்'' என்றார். முனிவர்கள் பக்தியுடன் விநாயகர் கவசத்தைப் பாராயணஞ் செய்து வந்தார்கள்.

சிந்து உற்பாதங்களைக் கண்டு உள்ளம் உலைந்தபோது, ''பிள்ளையாரால் உனக்கு அழிவு வரும்'' என்று அசரீரி கூறியது. பிள்ளையாரை வஞ்சனையால் கொல்ல வேண்டும் என்று அமைச்சர்கள் கூறினார்கள். சிந்து பல அசுரர்களைப் பிள்ளையாரைக் கொல்லுமாறு கட்டளையிட்டான்.

கிருத்திராசுரன் பெரிய கழுகு வடிவாக வந்து பிள்ளையாரைக் கவ்விக் கொண்டு சென்றான். பிள்ளையார், கழுகின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொன்றார். கீழே வீழ்ந்து உதிரம் கக்கி மாய்ந்தான் கிருத்திராசுரன்.



இரண்டாம் மாதத்தில் கேமாசுரனும் குசலாசுரனும் பன்னிரு யோசனையுள்ள பெருச்சாளி வடிவம் கொண்டு வந்தார்கள். பிள்ளையார் பெரும் பூனை வடிவு கொண்டு அவர்களைக் கொன்றார்.

இவ்வாறு பல வடிவங்களாக வந்த அசுரர்கள் அனைவரும் விநாயகரால் மாண்டு போனார்கள்.

விநாயகர் முனிவர்களின் வீடுகள் தோறும் சென்று பலப்பல திருவிளையாடல்கள் புரிந்தார். முனி பத்தினிகள் படைத்த அப்பம், கொழுக்கட்டை, கடலை, பொரி இவைகளை உண்டு அருள் புரிந்தார்.

விச்சுவப் பிரமா பாசம் அங்குசம் என்ற படைக்கலங்களை உண்டாக்கி விநாயகரிடம் தந்து பணிந்தான்.

சிந்து தன் சேனைகளை அனலாசுரன் தலைமையில் பிள்ளையாரைக் கொன்று வருமாறு அனுப்பினான். பிள்ளையார் அப்படைகளை மாய்த்து அனலாசுரனைக் கொன்றார்.

விநாயகர் நந்திதேவரைச் சிந்துவிடம் நல்லுரை கூறுமாறு தூது அனுப்பினார். நந்திதேவர் சிந்துவிடம் வந்து, ''சிந்துவே! தேவர்களை இடர்ப்படுத்தாதே. உத்தமனாக இரு'' என்று அறிவுரை பகர்ந்தார். அதைக் கேட்டு அவன் எள்ளி நகையாடினான். நந்திதேவர் சினத்துடன் பெருமூச்சு விட்டார். அதனால் அம்மண்டபத்தின் உத்தரம் பிளந்தது. அசுரர்கள் பதைத்தார்கள். சிந்து திகைத்தான். மேலும் அவரைப் பகைத்தான். நந்திதேவர் திரும்பிச் சென்றார்.

சிந்துராசன் படையெடுத்துப் போருக்குச் சென்றான். பூதப் படைகளுக்கும் சிந்துவின் படைகளுக்கும் போர் நிகழ்ந்தது. படைகள் அழிந்தன. சேனைத் தலைவர்கள் மாண்டார்கள்.

சிந்து தனியே போருக்கு வந்தான். விநாயகர் மயில் மீது ஏறி வந்தார். சிந்து தான் பிறந்த போதே தன்னுடன் பிறந்த சக்கராயுதத்தைச் சுழற்றி எறிந்தான். அது அனல் மழை பொழிந்து கொண்டு வந்தது. விநாயகர் சிரித்துக் கொண்டிருந்தார். சக்கராயுதம் விநாயகரிடம் வந்து அவர் பாதமலர் மீது வீழ்ந்து வணங்கி நின்றது. இந்த அதிசயத்தைக் கண்ட சிந்து ஆச்சரியப்பட்டான். மானமும் வீரமும் கொண்டு தன்னுடன் பிறந்த மற்றொரு படையாகிய சூலாயுதத்தை எடுத்தான். மனத்தால் வழிபட்டு ஏவினான். விநாயகர் தமது திருக்கரத்தில் உள்ள பாசத்தை விடுத்தார். பாசம் சென்று சூலத்தை அழித்தது. சிந்துவின் மார்பைப் பிளந்தது. போரில் மாண்ட பூதர்களை எழுப்பியது. மீண்டும் ஐயன் கரத்தில் வந்து அமர்ந்தது. தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். தேவரும் முனிவர்களும் உள்ளம் உவந்தார்கள்.

சக்கரபாணி மகனுக்காக வருந்தினான். ஈமக் கடன்கள் செய்தான். பிள்ளையாரை வழிபட்டு மநுநெறிப்படி மாநிலத்தை ஆட்சி புரிந்தான்.



அட சிங்கக் குட்டிகளா !

சோவியத் குடியரசுகளில் ஒன்றான அஸர்பைஜான் குடியரசின் தலைநகரான பாகூவில் ஒரு கட்டிடக் கலைஞரின் குடும்பம் உள்ளது. அவரது பெயர் பெர்பெரோவ். இக் குடும்பத்தில் அம்மா, அப்பா, ஒன்பது வயது மகள், ஏழு வயது மகன், பாட்டி ஆகியோரும் அவர்களது வளர்ப்பு நாய் 'சாப்பா' வும் மற்றும் இரண்டு சிங்கங்களும் உள்ளன.


அவர் குடும்பத்தினரும், அவர்களுடன் வசிக்கும் சிங்கங்களும் மிகுந்த பாசத்துடன் பழகுகின்றனர். இந்தச் சிங்கங்கள் குழந்தைகளுடன் மிக மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருக்கின்றன. குழந்தைகள் அவற்றின் மீது சவாரி செய்கின்றன; அவற்றின் பிடரி மயிரைப் பிடித்துக் குலுக்குகின்றன; வாலைப் பிடித்து இழுக்கின்றன. இத்தகைய அன்பு விளையாட்டையெல்லாம் இந்தச் சிங்கங்கள் பொறுத்துக் கொள்வதோடு, ரசிக்கவும் செய்கின்றன. குழந்தைகள் அன்பாக அடிக்கும் பொழுது அவை பாசத்துடன் கர்ஜிக்கின்றன. யாராவது விருந்தினர் வந்தால் இச்சிங்கங்கள் அவர்களிடம் பூனையைப் போல் சகஜமாகப் பழகுகின்றன.

'நான் ஒரு சிங்கத்தை வளர்க்கிறேன்' என்ற டெலிவிஷன் படத்தில், பெர்பரோவின் குழந்தைகளும் இச்சிங்கங்களும் அண்மையில் நடித்துள்ளனர். இதைப் பார்த்தால் உங்களுக்கும் சிங்க சவாரி செய்ய வேண்டும் போல ஆசையாக இருக்கிறதில்லையா?

நன்றி: **சோவியத் செய்தித் துறை**

கடல் கன்னி

ஏ. விஜய் ஆனந்தகுமார்



முன்னொரு காலத்தில் ஜப்பான் தேசத்தில் கடற்கரை ஓரமாக ஒரு கிராமம் இருந்தது. அங்கு சிதிங் என்ற ஏழை மீன் பிடிப்பவனும், அவன் தங்கையும், அவனது தாயாரும் வசித்து வந்தனர். அவர்கள் மிகவும் ஏழைகள்.

சோற்றுக்கு, சிதிங் பிடித்த மீனை அன்றாடம் விற்று அதில் கிடைத்த காசில் ஜீவனம் செய்தனர். தினமும் சிதிங் தனது சிறிய படகில் சென்று மீன் பிடிப்பான்.

ஒரு நாள் சிதிங் தனது வலையையும், படகையும் எடுத்துக் கொண்டு மீன் பிடிக்கக் கடற்கரைக்குச் சென்றான். கடலில் சிறிது தூரம் சென்று வலையை



வீசிப் பார்த்தான். பாவம்! சிதிங்! ஒரு மீன்கூட வலையில் சிக்கவில்லை. பல முறை மீன்களை வலை போட்டுத் தேடிய சிதிங் கவலையுடன் கரைக்கு வந்து, சோர்ந்து போய் ஒரு பாறையின் மீது அமர்ந்தான்.

அப்போது சில சிறுவர்கள் ஓர் ஆமையைத் துரத்திக் கொண்டு வந்தனர். அந்த ஆமை மெதுவாக நகர்ந்து வந்து சிதிங்கின் காலடியில் புகுந்து கொண்டது. சிறுவர்கள் ஓடி வந்து, ''யோவ்! நாங்கள்தான் இந்த ஆமையைத் துரத்திக் கொண்டு வந்தோம். எனவே இந்த ஆமையை எங்களுக்குத் தந்துவிடு!'' என்றனர். சிதிங் இரக்க குணம் மிக்கவன். எனவே அவன் அவர்களைப் பார்த்து, ''ஐயோ! ஓர் உயிரை ஏன் வீணாகச் சித்திரவதை செய்து கொல்லுகிறீர்கள்? அதற்குப் பதில் வேறு ஏதாவது என்னிடம் கேளுங்கள். முடிந்தால் தருகிறேன்'' என்றான். அவர்களும், ''சரி! இந்த ஆமைக்குப் பதிலாக உனது படகைத் தருகிறாயா?'' என்றனர் அவன் பதில் சொல்வதற்குள்.

திடீரென்று சிதிங்கைக் கேட்காமல் அப்பையன்கள் ஒன்றுசேர்ந்து அவனுடைய சிறிய படகைக் கடலில் தள்ளிக் கொண்டு சென்றுவிட்டனர். 'என்னிடம் இருந்த ஒரே ஒரு படகும் போய்விட்டதே!' என்று கவலையோடு அவனது காலடியில் கிடந்த ஆமையைப் பார்த்தான். அதைப் பார்க்கப்

பரிதாபமாக இருந்தது. அதன் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கடற்கரை மணலை நனைத்தது. அதன் நீல நிறக் கண்களைப் பார்த்தபோது, 'என்னைக் கொன்று விடாதே' என்று கெஞ்சுவது போல் இருந்தது. ''நீ மிகவும் அற்ப உயிர்! உன்னைக் கொன்று தின்ருல் எங்களது பசி தீராது. எனவே மீண்டும் சிறுவர்கள் வருவதற்குள் கடலுக்குள் ஓடிவிடு!'' என்ருன் சிதிங். அதுவும் கடலுக்குள் சென்றுவிட்டது.

அடுத்த நாள் காலை சிதிங வழக்கப்படி மீன் பிடிக்கச் சென்ருன். கடல் வழக்கத்தைவிட அமைதியாகவும், அலையற்றதாகவும் இருந்தது. பாறையின் மீது அமர்ந்து வலையைச் சரி செய்து கொண்டிருந்த சிதிங்கை அதிர வைத்தது ஒரு குரல்! அவன் பின்னுலிருந்து ''சிதிங்! சிதிங்! உங்கள் இடது பக்கம் பாருங்கள்!'' என்றது அந்தக் குரல். முதலில் மனப் பிரமையோ என்றெண்ணிய சிதிங் மீண்டும் அக்குரல் கேட்டதால் இடது பக்கம் திரும்பிப் பார்த்தான். அங்கு, அன்று தப்பியோடிய அதே ஆமை நின்றிருந்தது. ஆச்சரியமடைந்த சிதிங், ''நீயா பேசியது?'' என்ருன்.


''ஆமாம். நான்தான். என்னைக் காப்பாற்றியதற்காக உங்களுக்கு நன்றி சொல்லவே வந்திருக்கிறேன். என் உயிரைக் காப்பாற்றியதற்கு உபகாரமாக நான் ஒன்று செய்கிறேன். நீங்கள் கடலின் அடிக்குச் செல்ல ஆசைப்படுகிறீர்களா?'' என்று கேட்டது ஆமை.

சிதிங், ''என்ன என்னைக் கேலி செய்கிருயா? நான் கடலின் அடிக்குச் சென்ருல் உயிரோடு இருப்பேனு?'' என்ருன்.

''என் முதுகின் மேல் ஏறி அமர்ந்து கொண்டால் உங்களுக்கு ஓர் ஆபத்தும் வராது!'' என்றது.

அதன்படியே சிதிங்கும் ஏறி அமர்ந்து கொண்டு கடலின் அடிக்குச் சென்ருன். 'ஆகா! என்ன அதிசயமான காட்சி?' என்று வியந்தவண்ணம் சென்ருன். கடைசியில் ஆமை அவனை ஓர் அழகிய மாளிகையின் முன்னே கொண்டு சென்றது. அவனுல் அவன் கண்களையே நம்ப முடியவில்லை. ஜப்பானில் ஆட்சி புரியும் அரசருக்குக்கூட இந்த மாதிரி அரண்மனை இல்லை. அதன் நவரத்தினக் கற்களாலான சுவர்களும், பவளத்தாலான தரையும், மரகதப் பச்சைக் கற்களாலான கோபுரமும் கொண்ட அந்த அழகிய அரண்மனையைக் கண்டு வியந்து நின்ருன். ஆமை அவனை அவ்வரண்மனையின் முன்னே கொண்டு போய் நிறுத்தியது.

''சிதிங்! தயவுசெய்து சில விளுடிகளுக்கு உங்களது கண்களை மூடிக் கொள்ளுங்கள்'' என்றது. சிதிங் கண்களைச் சில விளுடிகளுக்கு மூடிக் கொண்டு நின்ருன். ''சரி! இப்போது கண்களைத் திறந்து பாருங்கள்'' என்று சொன்னது. மெதுவாகக் கண்களைத் திறந்த சிதிங், 'என்ன இது! நான் கனவு காண்கிறேனு?' என்று





வாடாமலர்

நாம் வீணாகக் கழிக்கும் ஒவ்வொரு வினாடியும் நம் வாழ்வில் மீண்டும் பெற முடியாத பெரும் செல்வமாகும். - கார்ல் மார்க்ஸ்.

சோம்பல் இளைப்பாறுதலல்ல. அது வேலையை விட அதிகக் களைப்பைத் தருவதாகும்.

- ஜேம்ஸ் ஆல்பர்.

வியந்தான். அவன் முன்னே ஓர் அழகிய கடல் கன்னி நின்றிருந்தாள்.

''எங்கே எனது நண்பனான ஆமை?'' என்றான் சிதிங். ''இதோ, நான்தான் அந்த ஆமை. நான் கடலரசனின் மகள், கடல் கன்னி!'' என்றாள். அவள் அவனைக் கடலரசனிடம் அழைத்துச் சென்றாள். தன் மகளின் உயிர் காத்த உத்தமனைக் கடலரசன் பாராட்டினான்.

அக்கடலில் உள்ள கடற் கோயிலிலேயே சிதிங்கும், கடற்கன்னியும் திருமணம் செய்து கொண்டனர். சில தினங்களுக்குப் பிறகு சிதிங்குக்குத் தனது வீட்டைப் பற்றிய நினைவு வந்தது. மனைவியிடம் அவர்களைப் பார்த்து வர அனுமதி கேட்டான்.

''நீங்கள் இந்தக் கடலில், மூன்று கடல் வருடங்களைக் கழித்திருக்கிறீர்கள். எனவே, உங்களது தாயாரும், தங்கையும், பல ஆண்டுகளுக்கு முன்பே இறந்திருப்பார்கள்'' என்றாள். சிதிங் அதை மறுத்து, ''இல்லை, இல்லை! எதற்கும் நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்'' என்றான். அவளும் தனது கைவிரலில் அணிந்திருந்த வைர மோதிரத்தைக் கழற்றி, அவனது கை விரலில் அணிவித்து, ''எக்காரணத்தைக் கொண்டும் இதை உங்களது கையிலிருந்து கழற்றி விடமாட்டேன் என்று எனக்குச் சத்தியம் செய்து கொடுங்கள்!'' என்றாள். அவனும் சத்தியம் செய்து கொடுத்தான்.

உடனே அவள் ஆமையாக மாறி, அவனைச் சுமந்து கொண்டு கடலின் மேற்பரப்புக்குக் கொண்டு சென்றாள். அவனைக் கடற்கரையின் மணற் பரப்பில் இறக்கி விட்ட ஆமை, அவன் செல்வதைப் பார்த்துக் கண்ணீர் விட்டது.

அவன் நேராகத் தனது வீட்டுக்குச் சென்றான். அங்கே அவன் வீட்டைக் காணவில்லை. அதைக் கண்டு திடுக்கிட்ட சிதிங் அருகிலிருந்தவர்களை விசாரித்தான். அப்போது அவனைச் சுற்றி நிறையக் கூட்டம் சேர்ந்துகொண்டது. அவர்கள் எல்லோரும் அவனைப் பார்த்துப் பலவாறு கேலி செய்தனர்.

அப்போது கிழிந்த சட்டையும், கிழிந்த பாவாடையும், அழுக்கடைந்த [illegible]லும் உடைய ஒரு சிறுமி ஓடி வந்து கூட்டத்தை விலக்கிக் கொண்டு சிதிங்கிடம் சென்று, ''நீ சிதிங் என்று சொன்னாய்?'' என்றது.

'' ஆமாம்! ஆமாம்! நான்தான் சிதிங்... நான்தான் சிதிங்!'' என்று பைத்தியம் பிடித்தவன் போல் கத்தினான். அச்சிறுமி அவனைப் பார்த்து, ''எனது அம்மா சிதிங்கைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறாள். அவன் பல ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவனும். அவனது தங்கையின் கொள்ளுப் பேத்தி நான். என் பெயர் ஸுவான்'' என்றாள்.

சிதிங் உடனே அந்தப் பெண்ணை அணைத்துக் கொண்டு, ''ஸுவான்... நான்தான் அந்த சிதிங்! நான் உங்களது மாமா!'' என்றான்.


அச்சிறுமி, ''மாமா! எனது அம்மா இறந்துவிட்டாள். நாங்கள் மிகவும் ஏழைகளாகி 'விட்டோம்'' என்றாள். அவன் அவனது வைர மோதிரத்தைப் பார்த்து, ''மாமா, இதை எனக்குத் தருகிறீர்களா? இதை விற்று எனது தம்பிகளுக்கு உணவு வாங்கிக் கொள்கிறேன்!'' என்றாள்.

அவள் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவன் அம்மோதிரத்தைக் கழற்றி அச்சிறுமிக்குக் கொடுத்தான். அச்சிறுமி அதைப் பெற்றுக் கொண்டு வேகமாக ஓடிவிட்டாள்.

திடீரென்று சிதிங்குக்குக் கண்கள் பஞ்சடைந்தன. நெஞ்சுத் துடிப்பு நின்றது. எங்கும் ஒரே இருட்டாக இருந்தது. அவனால் நிற்க முடியவில்லை. கை, கால்கள் துவண்டு, சுருண்டு கீழே விழுந்தான். அப்போதுதான் அவனுக்கு 'தான் மோதிரத்தைக் கழற்றித் தந்தது தவறு' என்று புரிந்தது. திடீரென்று அவன் கீழே, கடற்கரைக்கு மிக சமீபத்தில், கடற்கரை மணலில் விழுந்து இறந்தான்.

அடுத்த நாள் இரவு கடல் கன்னி ஆமையாக வந்து, அவனுக்கு வெள்ளைச் சலவைக் கல்லால் ஒரு கல்லறை அமைத்து விட்டாள். ஒவ்வொரு பௌர்ணமியன்றும் கடற்கரைக்கு வந்து சிறிது நேரம் நின்று அழுதுவிட்டுச் சென்றது. இன்றும் இந்நிகழ்ச்சி ஒவ்வொரு பௌர்ணமியன்றும் ஜப்பானில் நடப்பதாகச் சொல்கிறார்கள் ஜப்பானியர்கள்!

மூளைக்கு வேலை




☐ 1. மேலேயுள்ள மூன்று வரிசைத் தலைகளில் கீழ்க் கோடியில் வினாக் குறியிட்ட இடத்தில் இருக்க வேண்டிய தலை எதுவாக இருக்கும்? அதன் கீழே உள்ள ஆறு தலைகளிலிருந்து பொருத்தமான ஒரு தலையைத் தேர்ந்தெடுத்துக் கூறுங்கள், பார்க்கலாம்.

☐ 2. கீழேயுள்ள படத்திலிருக்கும் கூஜா முகங்களில் மூன்று மட்டும் ஒரே மாதிரியானவை. அவைகளை இனங் கண்டு ஒதுக்க முடியுமா, பாருங்கள்.

2-ன் விடை: ஒன்று, ஆறு, எட்டு. இவை மற்றவைகளிலிருந்து எப்படி மாறுபட் டிருக்கின்றன, புரிகிறதா?


1-ன் விடை: ஆறாவது எண்ணிட்ட தலை. மூன்று வகையான முகம், ஒவ்வொன்றிலும் முகத்தின் அமைப்பு, காது, குல்லாய்கள் மாறுபட்டிருக்கின்றன. ஒவ்வொரு முக வரிசையிலும் வகைக்கு ஒவ்வொன்று தான் இருக்க வேண்டும்.




☐ அது ஓர் அபூர்வமான கோட்டை. மண்டை ஓட்டைப் போலக் கட்டப்பட்டுள்ள அதில் 35 மர்ம அறைகள் இருக்கின்றன. இந்த அறைகளுள் ஏதோ ஓர் அறைக்குள்தான் இளவரசி சிறைப் பட்டிருந்தாள். அது எந்த அறை என்பது யாருக்கும் தெரியாது. இந்த முப்பத்தைந்து அறைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. ஒவ்வோர் அறைக்கும் 2, 3 அல்லது 4 கதவுகள்கூட உண்டு. இளவரசியைத் தேடி வரும் அரச குமாரர்கள் அந்தக் கோட்டையின் எல்லா அறைக் கதவுகளின் வழியாகவும் ஒரே



ஒரு முறை நுழைந்து வெளி வந்தாக வேண்டும். அப்போதுதான் இளவரசி உள்ள மர்ம அறைக்குள் போகலாம். ஒரு வாசல் வழியாக இரண்டு தடவை நுழையவோ வெளி வரவோ கூடாது. கீழுள்ள விடையைப் பார்க்காமல் உங்களால் ராஜகுமாரியைச் சிறை மீட்க முடியுமா பாருங்கள்.





விநாயகர் கவசம்

மாணிக்கம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மகோற்கடர்தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க; தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க;

முத்து


கவின்வளரும் அதரங்க சமுகர்காக்க
தால்அங்கணக் கிரீடர் காக்க;
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க;
அவிர்நகைதுன் முகர்காக்க;
அள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க;
தவிர்தலுறு திளங்கொடிபோல்
வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க.

பவழம்

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்க; களங் கணேசர் காக்க;
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க; இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க;அகட்
டினைத்துலங்(கு)ஏ ரம்பர் காக்க;

பச்சை

பக்கம்இரண் டையுந்தரா தரர்காக்க;
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க; விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க;
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க;சக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க; ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க.



கோமேதகம்

தாழ்முழந்தாள் மகாபுந்தி காக்க;இரு
பதம்ஏக தந்தர் காக்க ;
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க ;
முன்கையை வணங்குவார் நோய்
ஆழ் தரச்செய் ஆசாபூ ரகர் காக்க ;
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள் விநா யகர்காக்க ;
கிழக்கினிற்புத் தீசர் காக்க

வைரம்

அக்கினியிற் சித்தீசர் காக்க;உமா
புத்திரர்தென் ஆசை காக்க ;
மிக்கநிருதி யிற்கணே சுரர்காக்க ;
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்
திக்கதனிற் காக்க;வா யுவிற்கசகர்
ணர்காக்க; திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க; வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க

நீலம்

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க;இர
வினும் சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்க;இராக்
கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிப்பேய் இவையாதி
உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க.

பத்மராகம்

மதி,ஞானம்,தவம்,தானம், மானம், ஒளி,
புகழ்,குலம்,வன் சரீரம் முற்றும்
பதிவான தனம், தானியம்,கிரகம்,
மனைவி, மைந்தர், பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க;
காமர்பவுத் திரர்முன் னை
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.


வைடூரியம்


வென்றி,சீ விதம்கபிலர் காக்க;கரி
யாதியெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓ
திடின்,நும்பால்இடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்காள், அறிமின்கள் ;
யாரொருவர் ஓதி னாலும்
மன்ற ஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

□

வாரியார் தாத்தா உங்கள் நல்வாழ்வுக்காக இந்த விநாயகர் கவசத்தை வெளியிடச் சொன்னார்கள். இந்த விநாயகர் கவசத்தை முதலில் படிக்கும்போது உங்களுக்கு நாக்குப் புரள மறுக்கலாம். கொஞ்சம் கஷ்டமாகவும் இருக்கும்தான். ஆனால் இரண்டு மூன்று தடவை படித்துவிட்டால் மேலும் மேலும் படிக்க வேண்டும் என்ற ஓர் ஆர்வம் பிறக்கும். இதைத் தினமும் நீங்கள் பாராயணம் செய்தால் வாரியார் தாத்தா ரொம்பவும் சந்தோஷப்படுவார்.

ஆக்க வேலைக்கு அணுசக்தி





இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களில் யுரேனியம்தான் மிகவும் கனமானது.

யுரேனியம் நியூகிளியஸுக்குத்தான் மிக அதிகமான புரோடான்கள் உண்டு.

ஒவ்வொரு புரோடானும் நேர் மின் சக்தித் துகள்களை உடையது. இவை ஒன்றை ஒன்று எதிர்க்கும் குணமுடையவை.

காந்தத்தில் ஒரே துருவங்கள் எப்படி விலகி ஓடுமோ அது போல, யுரேனியம் அணுவின் நியூகிளியஸில் உள்ள புரோடான்கள் ஒன்றை ஒன்று எதிர்த்து விலகும் போது வெடிப்பு ஏற்படுகிறது.

இந்த வெடிப்பு மற்ற பொருள்களின் நியூகிளியஸில் ஏற்படுவதைவிட யுரேனியம் அணுவில் அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இதனால்தான் அணு வெடிப்புக்களில் யுரேனியத்தைப் பயன் படுத்துகிறார்கள்.

புளூட்டோனியமும் அணு உலைகளிலும் அணு சக்தி உற்பத்தியிலும் பயன்படுத்தப்படுகிறது. புளூடோனியம் என்பது மனிதனால் தயாரிக்கப்படும் செயற்கை யுரேனியம்.

இனி, அணுவின் மூலம் சக்தியை உற்பத்தி செய்யும் தத்துவத்துக்கு வித்திட்ட விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் கொள்கைக்கு வருவோம். பொருள் (*Matter*) என்பது அழிவில்லாதது அல்ல. ஒரு பொருளை அழித்து ஆற்றலாக — சக்தியாக மாற்றலாம். அதே மாதிரி சக்தியையும் பொருள்களாக மாற்றலாம். இதுதான் அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் கண்டு பிடித்த தத்துவம். அவருடைய இந்த முடிவின்படி பொருளுக்கும் சக்திக்கும் உள்ள தொடர்பை $E = mc^2$ என்று குறிப்பிட்டார்.

இதில் E என்பது எனர்ஜி - அதாவது ஆற்றல். M என்பது பொருண்மை. (Mass) (C) என்பது ஒளி வேகம். $C = 3 \times 10^{10}$ (செ.மீ. வினாடி) இதன்படி M என்ற அளவு பொருள் அழியும்போது MC^2 என்ற அளவுக்குச் சக்தி கிடைக்கிறது. C என்பது மிகப் பெரிய எண் - C^2 $(C \times C)$

ஆகவே, அழிவுபடும் பொருள் மிக மிக நுண்ணியதாக இருந்தாலும் அதிலிருந்து கிடைக்கும் ஆற்றல் அபரிமிதமானதாக இருக்கும்.

யுரேனியம், புளூடோனியம் ஆகியவற்றின் அணுக்கள் உறுதியற்றவை. நியூட்ரான் துகளைக் கொண்டு இவற்றின் கருவைத் தாக்கும்போது கிட்டத்தட்ட சமமான எடையுள்ள இருதுண்டுகளாக இது உடைகிறது. இவ்விரு துண்டுகளின் மொத்த எடை, உடைபடாத நிலையிலிருந்த அணுக் கருவின்எடையை விடக் குறைவாக இருக்கும். இதனால் அணுப் பிளவின் போது அப்பொருண்மையில் ஓரளவு அழிந்திருக்க வேண்டும். ஐன்ஸ்டீனின் கொள்கைப்படி அப்படி அழிவுற்ற பொருண்மை ஆற்றலாக மாறி இருக்கிறது. அழிவுறும் பொருண்மை மிகக் குறைவானதாயினும் அதனால் கிடைக்கும் ஆற்றலோ மிக மிக அதிகமானது.

ஒரு நியூட்ரான் துகள் கொண்டு ஓர் யுரேனியம் அணுக் கருவைத் தாக்கிப் பிளக்கும்போது அந்த அணுக் கரு இரு கூறுகளாகிறது. அப்போது அதன் கூடவே சராசரியாக இரண்டு அல்லது மூன்று நியூட்ரான்களும் காமாக் கதிர் வீச்சும் வெளிப் படுகின்றன. இந்த நியூட்ரான்கள் தன் அருகில் உள்ள அணுக் கருவை மறுபடி தாக்கிப் பிளக்கிறது. இந்தப் பிளவு ஒவ்வொன்றிலும் மீண்டும் இரண்டு அல்லது மூன்று நியூட்ரான்கள் வெளிப்படுகின்றன. இவை மறுபடியும்.... மறுபடியும் இப்படியே அணுப்பிளவும் நியூட்ரான்களின் தோற்றமும் சங்கிலித் தொடர் போலக் கிளைத்துப் பரவி ஓடுகின்றது. இதற்கு அணுக் கருத் தொடர்வினை என்று பெயர். ஒவ்வொரு முறை அணுக் கரு பிளவுறும் போதும் எல்லையற்ற ஆற்றல் வெளிப்படுகிறது. இந்தத் தொடர்வினை வெகு வேகமாக நிகழுமேயானால் அப்போது கிடைக்கும் ஆற்றலின் அளவை எழுத்தால் வர்ணிக்க இயலாது. அந்தச் சக்தியே பிரும்மாண்டமான 'வெடி' (*Explosion*)யாக உருவாகும். இதையே அணு வெடி, அணு குண்டு வெடி என்கிறோம்.

அணுக் கருத் தொடர்வினை நிகழ வேண்டுமானால் ஒவ்வொரு அணுப் பிளவின்போதும் வெளிப்படும்


நியூட்ரான்கள் அனைத்தும் சிதறி வீணாகி விடாமல் தொடர்ந்து அணுப் பிளவை உண்டாக்க வேண்டும். இந்தக் கிரியை நடைபெறப் பிளவுறும் பொருளின் பருமன் ஒரு குறிப்பிட்ட அளவை விடக் குறைவாக இருக்குமானால் நியூட்ரான்கள் அணுப் பிளவை உண்டாக்காமல் வெளியேறி விடும்.


கடந்த மே மாதம் ராஜஸ்தானத்துப் பாலைவனத்தில் நாம் வெடித்த அணு வெடியில் புளூடோனியம் தான் பயன் பட்டது. யுரேனியம், தோரியம், புளூட்டோனியம் ஆகியவை அணுக் கருப்பிளவுக்கு ஏற்றவை. இயற்கை யுரேனியத்தில் மூன்று ஐசடோப்புகள் உண்டு. (Isotopes விஞ்ஞானிகளின் குறிப்புப்படி இவை யு (யுரேனியம்) 238 யு-235, யு-234. இந்தக் கலப்பில் யு-238ல் தொடர்-வினை நிகழ்த்த முடியாது. தொடர் வினை நிகழ்வதற்கு யு-235தான் ஏற்றது.

அணுவெடியில் இமைக்கும்பொழுதில் தொடர் வினை நிகழ்ந்து முடிந்து விடுகிறது. இதைக் கட்டுப்படுத்தி நிகழச் செய்யும்போதுதான் அணு உலைகளுக்குப் பயன்படுவதாகிறது. இந்த அணு உலையில் உள்ள யுரேனியம் 238, அணுக் கருக் கிரியையின்போது புளூட்டோனியமாக மாறுகிறது. அணு உலை புளூடோனியத்தைத் தருகிறது. இது செயற்கை யுரேனியம். நாம் வெடித்த அணு வெடியில் பயன்படுத்தப்பட்டது இந்தச் செயற்கை யுரேனியம்தான்.

அணு குண்டு வெடிக்கும்போது பிளவுபடும் அணுக் கருக்களும் நியூட்ரான்களும் பயங்கரமான வேகத்தில்-நாலா பக்கங்களிலும் சிதறிப் பாய்கின்றன. இத்துடன் சக்தி வாய்ந்தகாமாக் கதிர் வீச்சும் வெளிப்படுகிறது. அணு குண்டு வெடிக்கும்போது வெளிப்படும் ஆற்றலில் பெரும் பகுதி வெப்ப ஆற்றல். தவிர, அணுக் கரு பிளவுபடும்போது பிரியும் இரு துண்டுகளும் கதிரியக்கத் தன்மையுடையவை. இவை மீண்டும் மீண்டும் பிளவுபடும்போது மேன்மேலும் சக்தி வாய்ந்த துகள்களையும் கதிர்களையும் வீசி முடிவில் கதிரியக்கமற்ற நிலையான தன்மையைப் பெறுகின்றன. இத்தகைய துகள்களும் கதிர் வீச்சுக்களும் உடல் நலத்துக்குப் பெருந் தீங்கு செய்பவை. அணு வெடியினால் அந்த இடத்தில் உண்டாகும் அபரிமிதமான வெப்பத்தினால் அபாயம் ஏதுமில்லை. அதன் பிறகு காற்றில் பரவும் கதிரியக்கத் துகள்களே மனித இனத்துக்கு மகத்தான கேடு விளைவிக்கக் கூடியவை.

இந்தக் கதிர் வீச்சினால் உண்டாகும் அபாயத்தைத் தடுக்கவே நாம் பூமிக்குள் நூறு மீட்டர் ஆழத்தில் அணு குண்டை வெடிக்கச் செய்திருக்கிறோம். இதனால் அணுக் கதிர் வீச்சு பூமியைத் துளைத்துக் கொண்டு மேற்பரப்புக்கு வரவில்லை என்பதை ஆராய்ச்சிகள் மூலம் நம் விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தி விட்டார்கள்.





மேலே: பாபா அணு ஆராய்ச்சி நிலையம், பம்பாய்.

கீழே: ஜெர்மனியில் லிங்கென் என்ற இடத்திலுள்ள அணுமின் சக்தி நிலையம்.


சுரஸையின் பிடிவாதம் மாருதியைச் சிந்திக்க வைத்தது.
ஜெய் ஹனுமான்
17
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு.
தேவர்களுக்கு நன்மை செய்யவே ராமர் அவதரித்திருக்கிறார். அவரது காரியமாகச் செல்லும் என்னைத் தடைப் படுத்துவானேன்? என் அறிவின் பலத்தைச் சோதிக்கிறீர்கள் போலும். இருக்கட்டும்...
சுரஸே! நான் முன்னைவிட வளர்ந் விட்டேன். உன் வாய்க்குள் இந் உடலுடன் நுழைய முடியாதே...
நானும் உனக்குச் சளைத்தவளில்லை. உன் உருவத்துக்கேற்றபடி என் வாயும் வளர்கிறது பார்..
இருவரும் மாறி மாறி வளர்ந்தார்கள். ஆஞ்சநேயர் சட்டென்று கட்டைவிரல் அளவுக்குத் தம் உடலைச் சுருக்கிக் கொண்டு இமைக்கும் நேரத்தில் அவள் அகன்ற வாய்க்குள் புகுந்து காது வழியே வெளி வந்து விட்டார்.
சபாஷ், சபாஷ்! அனுமனே நீ பலவான் மட்டுமல்ல புத்திமானும் கூட!
நம் கட்டளையையும் மீறவில்லை. அவன் காரியத்தையும் விடவில்லை. புத்திமான் பலவான்.
அனுமார் மேலும் பறந்து கொண்டே இருந்தார் திடீரென்று அவர் வேகம் தடைப் பட்டது.
ஏன் என்னால் முன்னேற முடியவில்லை? என்னை யாரோ கீழே இழுப்பது போல ஆ...! அதோ கடல் நீரில்....


சிம்மிகை என்ற அரக்கி கடல் நீரின் மீது விழும் அனுமாரின் நிழலோடு அவரது சக்தியையும் சேர்த்து இழுக்கலானள்.
சூரஸையைப் போல மரியாதைக்குரிய பெண்ணல்ல இவள்..
இவள் என்னை விழுங்க வாயைப் பிளந்து கொண்டிருக்கிறாள் அவள் சக்திக்கு உட்பட்டு அவளது வாயிக்குள் அணுவாகப் புகுந்து விடுவோம்.
சிம்மிகையின் வாய்க்குள் புகுந்து அவள் குடலைப் பிழிந்து அவளை வதைத்து விட்டு அவள் மார்பைப் பிளந்து கொண்டு வெளிப்படுகிறார் மாருதி.
எத்தனையோ காலமாக நமக்குத் தொல்லை கொடுத்து வந்த கொடிய அரக்கியைக் கொன்ற ஆஞ்சநேயா, நீ ஜெயத்துடன் திரும்பு வாயாக.
கடல் கடந்து திரிகூட மலை மீது அமைந்த இலங்காபுரியின் வெளிக்கட்டில் வந்திறங்கினார் மாருதி.
ஜெய, ஸ்ரீராம்! அதோ! தெரிவதுதான் இலங்கா நகரம் போலும்...
தொடரும்

கடன்

'கைலாஸ்'

ஒரு நாள் மாலை.

குளிர் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. ஒரு வியாபாரி வீதியின் ஓரமாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அவர் குளிருக்கு அடக்கமாக, கம்பளிக் கோட்டு குல்லாய் அணிந்து கொண்டிருந்தார்.

அவருக்கு எதிரே ஒரு சிறுவன் வந்து கொண்டிருந்தான். அந்தச் சிறுவன் காலணி எதுவும் அணியாமல் வெறுங் காலுடன் நடந்து கொண்டிருந்தான். ஒரு கிழிசல் கோட்டை மட்டும் அணிந்து கொண்டிருந்த அவனுடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.



அடிக்கடி அவன் உள்ளங் கைகளால் முகத்தைத் தேய்த்துவிட்டுச் சூடுபடுத்திக் கொண்டான். ''பேப்பர் — பேப்பர்'' என்று கூவியபடி, வீதியில் போய்க் கொண்டிருந்த ஒவ்வொருவரிடமும் ஓடி ஓடி விசாரித்தான். ஆனால், யாரும் அவனிடம் பேப்பர் வாங்கவில்லை. அவனுடைய பஞ்சடைந்து வெளிறிப் போயிருந்த முகம் மேலும் வாடியது.

வியாபாரி அவனை நெருங்கியதும் அந்தச் சிறுவன், அவரிடமும் ஒரு செய்தித் தாளை நீட்டி வாங்கிக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டான். வியாபாரி அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

''தம்பி! நீ எங்கே வசிக்கிறாய்?'' என்று வியாபாரி கேட்டார்.

''எங்கே இடம் கிடைக்கிறதோ அங்கே இரவில் படுத்துக் கொள்வேன், ஐயா!'' என்று சிறுவன் கூறினான்.

''உனக்குப் பெற்றோர்?''

''இல்லை, ஐயா!''

''காலையில் சாப்பிட்டாயா?''

''இல்லை, ஐயா!''

''நேற்று இரவு?''

''இல்லை, ஐயா!''

அந்தச் சிறுவனைப் பார்க்கவே அவருக்குப் பரிதாபமாக இருந்தது.

''உன்னிடம் எவ்வளவு பேப்பர்கள் இருக்கின்றன?''

''இருபது!''

''மொத்தம் எவ்வளவு ஆகிறது?''

''ஒரு தாள் பன்னிரண்டு காசுகள் விதம் இரண்டு ரூபாய் நாற்பது காசுகள் ஆகின்றன!''

பணிப் பெண் பவானி

முன்னொரு காலத்தில் ராஜஸிம்மன் என்ற ஓர் அரசன் மகேந்திரபுரி என்ற நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஒரு சுகபோகி. அவனிடம் பவானி என்ற பணிப் பெண் இருந்தாள். அவள் தினமும் அரசனுக்கு அழகான படுக்கை விரித்து அதன் மேல் மலராத மல்லிகை மொட்டுக்களைப் பரப்பி வைப்பது வழக்கம். ஒரு நாள் அரசனுக்கான படுக்கையைத் தயார் செய்துவிட்டு இவ்வாறு எண்ணினாள்:

'' இந்த அழகிய படுக்கையில் தினமும் படுக்கும் மன்னர் எவ்வளவு பாக்கியசாலி. இதில் உறங்கினால் ஏற்படும் இன்பத்துக்கு ஏதேனும் அளவு உண்டோ? அரசர் வருவதற்கு முன்னால் சில நிமிடங்கள் இதில் படுத்து நாமும் அந்த ஆனந்தத்தை அனுபவித்துப் பார்க்கலாமே!'' இவ்வாறு நினைத்துப் பணிப் பெண் பவானி அரசருக்காகத் தன்னால் தயார் செய்யப்பட்ட மலர்ப் படுக்கையில் படுத்தாள். அடுத்த சில நிமிடங்களில் நன்றாக உறங்கிவிட்டாள்.

இதற்கிடையில் அன்றைய அலுவல்களை முடித்துக் கொண்டு ஓய்வெடுப்பதற்காக அங்கு வந்த அரசர் தம் படுக்கையில் பணிப் பெண் படுத்திருப்பதைப் பார்த்துக் கடும் சினங்கொண்டவராகத் தம்முடைய ஏவலர்களை அழைத்து அந்தப் பணிப் பெண்ணைத் தூணில் கட்டி நூறு கசையடிகள்

வியாபாரியிடம் சில்லறையாக இல்லை. ஆகவே அவனிடம் அவர் ஓர் ஐந்து ரூபாய்த் தாளை நீட்டினார்.

"மீதிச் சில்லறையை அதோ அந்தக் கடையில் கொண்டு வந்து கொடு" என்று கூறிவிட்டு அவர் நடந்தார். கடையை அடைந்த அவர் வியாபாரத்தைத் தொடங்கினார்.

இரவு கடையை மூடும் நேரம் வந்தது. சிறுவன் சில்லறையைக் கொண்டு வரவில்லை.

"இந்தச் சிறுவர்களே இப்படித்தான். ஐயோ பாவம் என்று பார்த்தால் ஏமாற்றுவார்கள். திருட்டுப் பயல்கள்" என்று சலித்துக் கொண்ட வியாபாரி கடையை மூடிக் கொண்டு வீட்டுக்குப் போனார். அதோடு அந்தச் சம்பவத்தை அவர் அடியோடு மறந்தே போய்விட்டார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவருடைய கடைக்கு வேறு ஒரு சிறுவன் வந்தான்.

"ஐயா! என்னுடைய தம்பி நேற்று முந்திய நாள் உங்களுக்குச் சில்லறை மாற்றுவதற்குப் போன போது ஒரு லாரியில் மாட்டிக் கொண்டுவிட்டான். அவனை மருத்துவ மனையில் சேர்த்திருக்கிறார்கள். இப்போதுதான் அவனுக்கு நினைவு திரும்பியது. அவனிடமிருந்து ரூபாயை யாரோ எடுத்துக் கொண்டுவிட்டார்கள். அவன் உடல் குணமானவுடன் உங்களுடைய பாக்கியை எப்படியாவது கொடுத்துவிடுவான். அது வரை அவனுடைய இந்தக் கோட்டை நீங்கள் ஈடாக வைத்துக் கொள்ளும்படி உங்களிடம் சொல்லச் சொன்னான். இது கிழிந்த கோட்டுத்தான். ஆனால், அவனிடம் இதைத் தவிர வேறு எதுவுமே இல்லை!"

வியாபாரிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.



உடனே கடையை மூடி விட்டு அவர் அந்தச் சிறுவனை அழைத்து கொண்டு புறப்பட்டார்.

"தம்பி! என்னை உன்னுடைய தம்பி இருக்கும் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போ!" என்றார்.

அவர்கள் மருத்துவ மனையை அடைந்தனர். கட்டிலில் அசையாமல் படுத்தவாறு அந்தப் பாலகன் உறங்கிக் கொண்டிருந்தான். ஆம்! அப்படித்தான் வியாபாரி நினைத்தார். ஆனால்...?

நர்ஸ் அவரிடம் வந்து கூறினாள்.

"ஐயா! இந்தச் சிறுவன் இப்போதுதான் இறந்தான். உதட்டில் புன்முறுவலுடன் அவன் உயிர் பிரிந்தது."

வியாபாரியின் கண்கள் பனித்தன.

"போய் விட்டான்; எங்கு, பசி தாகம், குளிர், கடன் எதுவுமே கிடையாதோ அந்த இடத்துக்குப் போய் விட்டான்" என்று அவர் முணுமுணுத்தார். அவருடைய கைகள் அந்தக் கோட்டை மார்புடன் அணைத்துக் கொண்டன.

(ஸ்காட்லாந்து தேசக் கதையைத் தழுவியது)



கொடுக்குமாறு கட்டளையிட்டார். ஏவலர்களும் அவளை இழுத்துச் சென்று ஒரு தூணில் கட்டி அடிப்பதற்குத் தயாரானார்கள்.

மிகவும் புத்திசாலியான பவானி அரசரைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தாள். அதனால் ஆச்சரியமடைந்த அரசர், "பெண்ணே, நீ செய்த தவறுக்காக நான் தண்டனை அளித்திருக்கும் பொழுது நீ சிரிப்பதன் மர்மம் என்ன?" என்று கேட்டார். அந்தப் பணிப்பெண் இவ்வாறு பதிலுரைத்தாள்:

"மன்னா! சில நிமிட நேரமே உம்முடைய இந்தப் படுக்கையில் படுத்து உறங்கியதற்காக நான் நூறு கசையடிகள் அனுபவிக்கப் போகிறேன். இதே படுக்கையில் ஆயுள் முழுவதும் படுத்து உறங்கும் உமக்கு என்ன நேருமோ? இதை நினைத்தவுடன் எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. அதனால்தான் சிரித்தேன்" என்றாள்.

— ஆர். மாலதி






...அவளுக்கு மனங்குளிரும் மகிழ்ச்சியும் கிடைக்கிறது !

MAFATLAL GROUP

நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !


AIYARS.M.457 TM

செய்து பார்!




பள்ளிக்கூடம் முடிந்து மாலை வேளையில் ஓய்வாக இருக்கும் போது தமாஷாக விளையாட இதோ ஒரு விளையாட்டு: மேலே உள்ள படங்களை — புலியார், யானையார், குரங்கார், கரடியார் - அப்படியே டிரேஸ் செய்து கொள்ளுங்கள்.

புள்ளிக் கோடுகள் முக்கியம். ஏன் என்றால் அந்த இடத்தில் படங்களைக் கத்திரிக்கோலாலோ பிளேடினாலோ வெட்டிக் கொள்ள வேண்டும். துண்டாகிவிடாமல் இடது கைப் பக்கமுள்ள செங்குத்துக் கோடு வரை மட்டும் வெட்டிக் கொள்ளுங்கள். இப்போது இந்த நான்கு படங்களையும் இடது பக்கத்து ஓரமாகப் பசை தடவி ஒன்றின் மீது ஒன்றாக ஒட்டிக் கொள்ளுங்கள். இனிமேல் தான் வேடிக்கை. ஒவ்வொரு படமும் மூன்று துண்டுகளாக இருக்குமல்லவா? இவைகளை மாற்றி மாற்றிப் புரட்டும் போது... புரட்டிப் பாருங்களேன்! புலிக்குக் கரடியின் காலும் குரங்கின் டமாரமும்; யானைக்குப் புலிச் சட்டையும் கரடிக் காலும்—இப்படித் தாறுமாறாக மாறி மாறி அமைவது தமாஷாக இருக்கும். உங்கள் நண்பர்களிடம் காட்டிச் சிரித்து மகிழலாம். நல்ல பொழுதுபோக்கும்கூட.







இந்தியப் பழங்குடியினர்



இமயத்தில் உள்ள கட்டியர்கள்

டாக்டர் எஸ்.எஸ்.சசி.

வீட்டின் முன்னால் டாக்ஸி நின்றது. என்னைப் பார்த்தவுடன் கீதா, ''அப்பா வந்தாச்சு!'' என்று உரக்கக் கூவினாள். உடனே கண்ணனும் வீட்டிலிருந்து வெளியே ஓடி வந்தான். டாக்ஸிக்குப் பணம் கொடுத்துவிட்டு உள்ளே நுழைந்தேன். குழந்தைகள் உரிமையுடன் பையைப் பிடித்து இழுத்தன. இழுத்த வேகத்தில் பையிலிருந்த பழங்கள் கீழே உருண்டு ஓடின. பழங்களுடன் ஒரு போட்டோவும் நழுவி விழுந்ததைப் பார்த்த கீதா தாவிச் சென்று எடுத்தாள்.

'' படத்திலிருக்கும் குழந்தைகள் யார் ? இடுப்பைச் சுற்றி ஏதோ கறுப்பாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்களே, அது என்ன ?'' என்று படபடவென்று கேள்விகளை உதிர்த்தாள்.

''பிரயாணக் களைப்பு தீர்வதற்குள் அப்பாவை எதற்குத் தொந்தரவு செய்கிறீர்கள்?'' என்று என் மனைவி கடிந்து கொண்டதையும் குழந்தைகள் பொருட்படுத்தவில்லை.

குழந்தைகளின் ஆவலைத் தடுக்க முடியாமல், காப்பியை அருந்திய வாறே பேசத் தொடங்கினேன். ''படத்தைப் பாருங்கள். முதுகில் பொதி சுமந்து கொண்டு இரு சிறுமிகள் நிற்பதையும், அருகில் அவர்களது ஐந்து வயதுத் தம்பி நிற்பதையும் பாருங்கள். இவர்கள் **கட்டியர்** எனப்படும் பழங்குடியினர். இவர்கள் இடுப்பைச் சுற்றி ஒரு கம்பளிக் கயிற்றைக் கட்டிக் கொள்கிறார்கள். அதை **சீவ் - ரே - சேகி**, அதாவது, சிவனின் சின்னம் என்று அழைக்கிறார்கள்.

''சிவனுடைய பெயர் எப்படி அப்பா வந்தது?'' என்று கண்ணன் கேட்டான்.

''அதுவா? கட்டியர்களின் இஷ்ட தெய்வம் சிவபெருமான்தான். சிவனுடைய கழுத்தில் பாம்பு தொங்கிக் கொண்டிருக்கிறது அல்லவா? அதுபோல் இவர்களும் சிவனுடைய பாம்பு என்று நினைத்துக் கொண்டு ஒரு பெரிய கம்பளிக் கயிற்றை இடுப்பில் சுற்றிக்





கொண்டு விடுகிறார்கள். கயிறு சுமார் ஐம்பது அடி நீளமிருக்கும். கயிற்றைப் பலவிதங்களில் உபயோகிக்கிறார்கள். கயிற்றைக் கொண்டு இரவு நேரங்களில் ஆடுகளைக் கட்டி வைக்கிறார்கள். நீண்ட பிரயாணத்தின் போது தலைக்கு வைத்துக் கொண்டு படுத்துறங்க இதைத் தலையணையாகவும் பயன்படுத்துகிறார்கள். சில்-ரே-சேலி இல்லாவிட்டால் கட்டியர்களுக்கு எந்த வேலையும் ஓடாது.''

''இவங்கள்ளாம் எங்கே தங்கியிருக்காங்க?'' என்று கேட்டாள் கீதா.

''இவர்கள் இமயமலையின் அடிவாரத்தில் உள்ள சம்பா ஜில்லாவில் வசிக்கிறார்கள்.''

''அங்கெல்லாம் ரொம்பக் குளிராயிருக்குமே!'' என்றான் கண்ணன்.

''ஆமாம். அங்கு கடுங்குளிர் ஏற்படுவதுண்டு. அப்பொழுது கட்டியர்கள் எல்லாரும் ஆடுகளை ஓட்டிக் கொண்டு சமவெளிக்கு வந்துவிடுகிறார்கள். ஆதலால் கோடைக் காலத்தில்தான் கட்டியர்கள் பயிர் செய்ய முடிகிறது. இவர்கள் எங்கு சென்றாலும் நடந்தே செல்கிறார்கள். உழைப்பதற்கு அஞ்சாதவர்கள். நீங்களெல்லாம் பள்ளிக்கூடத்துக்குப் பையை எடுத்துச் செல்வதற்கே கஷ்டப்படுகிறீர்களே. கட்டியர்களின் குழந்தைகள் அப்படியல்ல. அவர்கள் கனமான பொதியைச் சுமந்து கொண்டு நீண்ட தூரம் கால் நடையாகவே செல்கிறார்கள்.''

''கட்டியர்களின் குழந்தைகள் ஸ்கூலுக்குப் போகிறார்களா?'' என்று கண்ணனும் கீதாவும் ஒரே சமயத்தில் கேட்டனர்.

''ஊஹூம். இவர்களுடைய அப்பாக்களும் ஸ்கூல் போனது கிடையாது. இவர்களுக்கும் ஸ்கூலுக்குப் போகக் கூடிய வசதி கிடையாது. ஒரு கட்டியரிடம் நான் பேசிக் கொண்டிருந்தேன். அவன் என்ன சொன்னான் தெரியுமா? தன்னுடைய பையனை ஸ்கூலுக்கு அனுப்பலாமா என்று ஒரு சூனியக்கார வைத்தியரைக் கேட்டதற்கு, அவன் கூடவே கூடாது என்று கூறியதால், ஸ்கூலுக்கு அனுப்பவில்லை என்று சொன்னான்.''

''அப்படீன்னா, கட்டியர்களின் குழந்தைகள் மழைக்குக்கூட ஸ்கூல் பக்கம் ஒதுங்குவதில்லையா?'' என்றான் கண்ணன் குறும்பாக.

''அப்படியல்ல. ஏதோ ஓரிரு குழந்தைகள் ஸ்கூலுக்குச் செல்கின்றனர். அவர்களும் ஆறாவது, ஏழாவது வகுப்புகளுக்கு மேல் போவது அபூர்வம். பாதிப் படிப்பிலேயே இவர்கள் விவசாயம் செய்யப் போய்விடுவார்கள்.''

இடைமறித்த கீதா, ''கட்டியர்களின் குழந்தைகள் ஆட்டங்களில் ஈடுபடுவது கிடையாதா?' என்றாள்.

''எல்லாக் குழந்தைகளையும் போல் தானே அவர்களும்? விளையாடாத குழந்தைகளும் இருக்க முடியுமா? எல்லோருக்கும் பிடித்த கண்ணாமூச்சி, கிட்டிப் புள், பலிங் சடுகுடு போன்ற ஆட்டங்களில் கட்டியர்களின் குழந்தைகளுக்கு விருப்பம் அதிகம். குழந்தைகள் பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். வெள்ளை வெளேர் என்று இருப்பார்கள். சிறுவர்கள் கோட் போன்ற ஆடையையும், சிறுமிகள் முழங்கால் வரையிலான கவுனையும் அணிகிறார்கள்.''

''கட்டியர்கள் சிவனை வணங்குவதாகச் சொன்னீர்களே, அப்பா!'' என்று கண்ணன் நினைவூட்டினான்.





''ஆமாம். இவர்கள் சிவனைத்தவிர குத்தா, கையிலூர், மீர் என்ற தெய்வங்களையும் வணங்குகிறார்கள். இத்தெய்வங்கள் மாந்தரீகச் சக்திக்குக் கட்டுப்படுவதாகக் கட்டியர்கள் கருதுகிறார்கள். யாருக்காவது வியாதி வந்துவிட்டால் அதைக் குணப்படுத்த மாந்திரீக முறையில் சூனிய வைத்தியர்கள் சிகிச்சை அளிக்கிறார்கள்.''

எங்கே முடிந்துவிடப் போகிறதோ என்று நினைத்த கீதா, ''இவர்களைப் பற்றி இன்னும் சொல்லுங்கள் அப்பா'' என்று சிணுங்கினாள்.

''சரி. உன் உத்தரவு. கட்டியர்களின் பழக்க வழக்கங்கள் விநோதமானவை. உதாரணம், கட்டியர்களின் தாய் மாமன் தனது மருமகனைக் காலைப் பிடித்து மரியாதை செய்ய வேண்டும். மருமகன் சிறு பையனாக இருந்தாலும் சரி, இவ்வாறு மரியாதை செய்துதானாக வேண்டும்.''

''கட்டியர்களின் குழந்தைகளைப் பார்க்க வெகு ஆசையாக இருக்கிறது'' என்றபடியே கண்ணன் படிப்பதற்காக எழுந்தான்.

''இது மிகவும் கஷ்டம். கட்டியர்கள் வாழும் இடங்களுக்குப் போக எந்தவித ரயிலும் கிடையாது. சாதாரணமாகச் சுமார் ஏழாயிரம் அடி உயர மலைப் பகுதிகளிலேயே கட்டியர்கள் வசிக்கிறார்கள். ஆதலால், ரொம்ப தூரம் கரடுமுரடான பாதையில் நடந்து சென்றால்தான் இவர்களைப் பார்க்க முடியும். சிரமத்தைப் பார்க்காமல், இவர்களைச் சந்தித்துவிட்டால் இவர்களின் கள்ளம் கபடம் இல்லாத பண்புகளைப் பார்த்து நமது கவலைகள் எல்லாம் பறந்து போய் விடும். நட்புக்காக இவர்கள் எதையும் செய்வார்கள். நான் போனபோது...''

''போதும், போதும். உங்கள் பிரதாபம். எல்லாவற்றையும் இன்றே கொட்டிவிட வேண்டாம்'' என்று என் மனைவி அன்புடன் அதட்டவே குழந்தைகள் அரை மனத்துடன் என்னை விட்டுப் பிரிந்தன.

தமிழாக்கம்: வி. கோவிந்தசாமி

ஓ, அப்படியா!

கீட்டு: உன் குழந்தைக்கு ஏன் ஒரு கால் ஊனமாக இருக்கிறது? பிறவியிலேயே அப்படியா, அல்லது...?


முயல்: அதுவா? பிறவி ஊனமல்ல. அதன் உயிரைக் காக்க நான்தான் அதன் காலைக் கடித்துத் துண்டித்தேன்.

கீட்டு: ஐயோ! நீயே உன் குழந்தையின் காலைக் கடித்துத் துண்டித்தாயா? கேட்கவே பயங்கரமாக இருக்கிறதே! அப்படி என்ன ஆபத்து?

முயல்: எல்லாம் உங்களால்தான். எங்களைப் பிடிப்பதற்காக நீங்கள் கண்ணி வைப்பதில்லையா? அப்படிப் பட்ட பொறியில் ஒருதடவை இவன் சிக்கிக் கொண்டான். இவன் கால் அதில் அகப்பட்டுக்கொண்டிருந்தது. கால் போகுமே என்று பார்த்தால் உயிரோடு நான் இவனை இழக்க வேண்டுமே. அதனால் காலைக் கடித்துத் துண்டித்துப் பொறியில் இவன் காலை மட்டும் விட்டு இவனை அழைத்துக்கொண்டு ஓடினேன்.

கீட்டு: அது சரி, கால் துண்டிக்கப் பட்டதினால் ஏற்பட்ட காயம் எப்படி ஆறிற்று?

முயல்: இப்படி ஒரு காலைக் கொடுத்து உயிரை மீட்டுக் கொண்டதும் நாங்கள் எங்காவது ஒரு மறைவிடத்தில் கொஞ்ச காலம் ஓய்வாக ஒளிந்திருப்போம். மருந்து என்று ஏதும் வேண்டாம். இயற்கையே எங்களைக் குணமாக்கி விடும். சில நாட்களில் காயம் ஆறிவிடும். பொறியில் சிக்கும் பிராணிகள் எல்லாமே இப்படித்தான் தங்கள் அவயவத்தைத் தாங்களே கடித்து உயிருக்குப் பணயமாக வெட்டிக் கொடுத்துத் தப்பித்துக் கொள்ளும். கஸ்தூரி எலி என்று ஒரு வகை. இது நீரில் நீந்திச் சென்று இரை தேட வேண்டும். ஆகவே இது மட்டும் இப்படிக் கால்களைத் துண்டித்துக் கொள்ள நேருமானால் அந்தக் காயத்துக்கு ஹெம்லாக் என்ற ஒரு வகை மூலிகை மரத்தின் பிசினைத் தடவிக் கொள்ளுகிறது. அப்போதுதான் சீழ் பிடிக்காமல் காயம் ஆறும்.



கீட்டு: ஓ! உன் மகனுடைய ஊனக் காலின் ரகசியம் இதுதானா?



மந்திரக் கம்பளம் ௭

வாண்டு மாமா

கீர்த்தி சிந்தனையில் ஆழ்ந்து சிலையாக உட்கார்ந்து கொண்டிருந்தான். சுறுசுறுப்பாக இயங்கும் அவன் மூளை ஏனோ முடங்கிக் கிடந்தது. இத்தனை நாளும் இல்லாத — அனுபவித்தறியாத ஒரு சோர்வு அவனை அழுத்திக் கொண்டிருந்தது. என்ன செய்வது எப்படிச் செய்வது என்ற எந்த முடிவுக்கும் வர முடியாமல் உட்கார்ந்திருந்தான். ''நெருப்பு அரக்கனைப் பார்த்தாகி விட்டது. 'இல்லை இருக்காது' என்று வாதிட்டதெல்லாம் தவறு என்றாகித் தத்ரூபமாக இதோ எரிமலைக் குழம்பிலே குளித்துக் கும்மாளமிட்டுக் கொண்டிருக்கிறது அது. அதனிடம் போய் அதை வெற்றி கொண்டு அதன் வாலையும் கொம்பையும் கொண்டு வந்தாக வேண்டும். இல்லாவிட்டால் குந்தளவல்லி என்னைப் பற்றி என்ன நினைப்பாள்?'' — அவன் நினைவு அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது போல ஒரு குலுக்கலை ஏற்படுத்தியது.

குந்தளவல்லியும் நெருப்பு அரக்கனும் மனத்திரையிலே வந்து போய்க் கொண்டிருந்தார்கள். விடிந்து வெகு நேரமாகி விட்டது. சூரியன் உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்தான். கீர்த்தியினால் எவ்வித முடிவுக்கும் வரமுடியவில்லை. ''நெருப்பு அரக்கனை வெற்றி கொண்டாக வேண்டியதுதான். அதில் பின் வாங்குவது கிடையாது. ஆனால் இதைப் புத்தி பூர்வமாகச் செயல்படுத்த வேண்டும். அசட்டுத்தனமாகப் போய் அதனிடம் அகப்பட்டுக்கொண்டு விழிப்பதில் அர்த்தமில்லை. அது எப்படி?'' சிந்தித்தான், சிந்தித்தான் - சிந்தித்துக் கொண்டேயிருந்தான். அவன் சிந்தனை வீண் போகவில்லை. சட்டென்று அரண்மனை நூல்நிலையத்தின் நினைவு வந்தது. பல மூதாதையர்களின் காலத்திலிருந்து பேணி வளர்க்கப்பட்ட அற்புதமான நூல்நிலையம் அது. இன்று கீர்த்தி மிகச் சிறந்த அறிவாளியாக விளங்குகிறான் என்றால் அது அந்த நூல் நிலையத்தினால்தான். அதில் எத்தனையோ அபூர்வமான நூல்களெல்லாம் இருந்தன. அநேகமாக அதிலுள்ள எல்லாவற்றையுமே அவன் படித்திருக்கிறான். மின்னல் வெட்டுப்போல ஏதோ ஓர் எண்ணம் தோன்றியது அவன் சிந்தனையில். அக்கினி அரக்கனை வெற்றி கொள்ள அங்குள்ள புத்தகங்களில் ஏதாவது வழி வகைகள் இருக்குமென்ற நம்பிக்கை தோன்றியது.

'அக்கினி அரக்கனை அழிக்கும் வல்லமை எதற்கு உண்டு? நெருப்புக்குப் பகை எது? நீர்தானே? தணலாகத் தகிக்கும் அக்கினி அரக்கன் மீது குளிர் நீரை ஊற்றினால்? அத்தனை தண்ணீருக்கு எங்கே போவது? தண்ணீர் கிடைத்தாலும் அதை இந்த மிருகத்தின் மீது கொண்டு வந்து கொட்ட முடியுமா? அப்படிக் கொட்டினாலும் இத்தனை பயங்கரமான தீக்குழம்பிலே எத்தனை நீரைக் கொட்டினாலும் அத்தனையும் ஆவியாகியல்லவோ போகும். அதனால் அது இன்னும் கனன்று அதிக சக்தியையல்லவா பெற்று விடும்?'—




வாசகசாலையில் கீர்த்தி வர்மனின் கை விரல்கள் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தன. மனமோ மேற் குறிப்பிட்டபடி சிந்தனைகளைக் கிளறிக் கொண்டிருந்தது.

'நெருப்பு அரக்கனுக்கு எதிரி — பனி அரக்கன். ஆ...! ஆம். அக்கினியிலே வளர்ந்து வாழும் ஒரு மிருகம் இருக் கும்போது நீரிலோ அல்லது பனியிலோ பிறந்து வளர்ந்து வாழ்ந்து வல்லமை பெற்ற ஒரு மிருகம் இருக்கக் கூடாதா என்ன?' பனிச்சென்று உதயமான பனி அரக்கனின் நினைவு எப்போதோ படித்த ஏதோ ஒரு புத்தகத்தில் அப்படிப்பட்ட ஒரு குளிர் அரக்கனைப் பற்றிப் படித் ததும் நினைவுக்கு வந்தது. எந்தப் புத்த கம் அது எங்கே இருக்கும்? இத் தனை நூல்களில் அதைத் தேடிக் கண்டு பிடிக்க முனைந்தால் அது முட்டாள் தனமில்லையா? கீர்த்தி முட்டாளா என்ன? பனி அரக்கன் என்ற ஒன்று இருக்குமானால் அதைக் காண்பதற்கான சாதனம் அவனிடம் இருக்கும்போது புத்தகங்களைத் தேடிக் கொண்டு இருக்க லாமா? அடுத்த விநாடி அவன் மனத் தில் மந்திரப் பொருள்கள் குவிந்து கிடக்கும் அறைக்குள் இருந்தான். அங்கு மேஜையின் மீது இருந்தது, நினைக்கும் காட்சியைக் காட்டும் பளிங்குக் கல் உருண்டை. அதன் முன் போய் நின்ற கீர்த்தி 'பனி அரக்கனை நான் காண வேண்டும்' என்று நினைத்துக் கொண்டு அதன் மீதாக வலது கையால் மூன்று முறை சுழற்றி விரல்களால் சொடுக்கினான்.

அடுத்த விநாடி...

அந்தப் பளிங்குக் கண்ணாடி உருண் டையிலே பல வண்ணக் கலவைகள் வேகமாகச் சுழன்றன. வனம், வனுந் திரம், மலை, நதி, வானம், வயல், நாடு, நகரம்-இப்படிப் பலவிதமான காட்சிகள் சுழன்று சுழன்று முடிவில் ஒரே வெண் மையாக உறை பனியால் மூடிய ஒரு பிரதேசம் வந்து நின்றது. எங்கும் ஒரே வெண்மை, வெண்மை! அதன் நடுவிலே நெடிதுயர்ந்து நின்றது ஒரு பெரிய மலை. மலையா அது? அசை கிறதே! அதோ அதென்ன? மலை தன்னைக் குலுக்கிக் கொள்ளுகிறதா? பனிப் பாறைகள் பாளம் பாளமாகப் பெயர்ந்து விழுகின்றனவே... அதோ மலைக்கு இரண்டு கைகள், ஒரு தலை!... இது மலையல்ல. மலை போன்ற கொடிய மிருகம். ஆ! அதன் வாயில் பனிக் கட்டியிலே செதுக்கியது போல் ஈட்டி ஈட்டியாக வெள்ளை வெளேர் என்று பற்கள். சூரிய ஒளியிலே அவை எப்படி ஜ்வலிக்கின்றன? செக்கச் சிவந்த அதன் வாயிலே எத்தனை நீண்ட நாக்கு? ஒரு பெரிய பனி மலை நகருவதுபோல் அல்லவா நகருகிறது இந்த மிருகம்? நீலக் கண்கள். இதைப் பார்த்தாலே குளிரினால் உள்ளமும் உடலும் உறைந்து போகின்றனவே! கீர்த்தியின் பற்கள் அவன் அனுமதி யில்லாமலே தடதட வென்று நடுங்கித் தாளமிட்டன. ''அக் கினி அரக்கனுக்கு ஏற்ற வல்லமை பெற்ற விரோதிதான் இந்தப் பனி அரக்கன்!'' என்ற மகிழ்ச்சியில் குழந்தையைப் போலக் குதூகலத்துடன் குதிக்க லானான். ''அக்கினி அரக்கனை அழிப் பதற்கான சூட்சுமத்தைக் கண்டு விட்டேன். குந்தளவல்லியின் அந்தக் கரிய பெரிய விழிகள் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் விரியும் அழகைக் கண்டு ஆனந்தப்படலாம் விரைவி லேயே'' என்று தனக்குத் தானே கூறிக் கொண்ட கீர்த்தி உருவத்தை மறைக் கும் மந்திரக் குல்லாயை எடுத்து



அணிந்து கொண்டான். ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்களைக் கடக்கும் மந்திரக் காலணிகளை அணிந்து கொண்டான். மந்திர வாளையும் மறக்காமல் எடுத்து இடையில் கட்டிக் கொண்டான். அக்கினி அரக்கனைச் சந்திக்கக் கிளம்பி விட்டான் கீர்த்தி வர்மன். ''அக்கினி அரக்கன் வாழும் எரிமலைக்கு என்னைக் கொண்டு விடு'' என்று கூறித் தரையில் 'டக் டக் டக்' என்று மூன்று முறை தட்டினான். அடுத்த விநாடி பறக்கும் பாதரட்சைகள் கீர்த்தியைச் சுமந்தபடி வான வீதியிலே தாவிக் கொண்டிருந்தன!

தாங்க முடியாத தகிப்பு, பொறுக்க முடியாத புழுக்கம் பிறர் பார்க்க முடியாதபடி மறைந்திருந்தால் என்ன? எரிமலையின் உக்கிரமான அனல் காற்று அந்த உடம்பைத் தாக்காமல் இருக்குமா? கீர்த்தியை எரிமலைக்கு அருகில் ஒரு குன்றின் மீது கொண்டு போய் இறக்கி யிருந்தது அந்தக் காலணி. அக்கினி அரக்கன் நீச்சலடிக்கும் எரிமலைக் குழம்புள்ள குளம் தகதகக்கும் கற்களைப் பந்தாடிக் கொண்டிருந்தது. அதிலிருந்து பறந்து வந்த சில கற்கள் மறைந்திருந்த கீர்த்தியின் மீதும் விழுந்தன.

தளதளக்கும் நெருப்புக் குழம்புக்குள் மூக்குளித்து எழுந்த அக்கினி அரக்கனின் மூக்குத் துவாரத்திலிருந்து புகையும், தீ ஜ்வாலையும் நீராவியும் பீச்சியடித்தன. வைர நெஞ்சம் கொண்ட வீரனையும் கதி கலங்க வைக்கும் காட்சியாக இருந்தது அது. அதைக் கொல்வதற்காக வந்த எத்தனை எத்தனையோ பேர்களை யெல்லாம் தனது மூச்சுக் காற்றினால் கருக்கிச் சாம்பலாக்கி யிருந்தது அந்த மிருகம். எரிமலைக் குளத்தை அடுத்திருந்த மலைச் சுவர்களிலே இப்படிக் கருகியவர்களின் சாம்பலும் எலும்பும் படிந்து குவிந்து கிடந்தன. 'இந்த எலும்புகளில் என் சகோதரர்களின் எலும்புமே கூட இருக்கலாம் — உண்மையிலேயே அவர்கள் இதைச் சந்திக்க வந்திருப்பார்களேயானால்' என்று எண்ணமிட்டபடியே பார்த்தான் கீர்த்தி. அக்கினி அரக்கனோ; ஊர்க் குளத்திலே உல்லாசமாக நீந்தி மகிழும் வாத்தைப் போல; எரிமலைக் குழம்புக் குளத்திலே மிதந்து மகிழ்ந்து கொண்டிருந்தது!

''ஹை...ஹேய்!'' என்று குரல் கொடுத்தான் கீர்த்தி. நெருப்புக் குழம்

புக்குள்ளிருந்து தலையை உயர்த்தி உற்றுக் கேட்டது அந்த மிருகம். அதன் கொம்புகள் தகதகவென்று ஜ்வலித்தன. கண்களிலிருந்து தீபாவளி வாணம்போல் நெருப்புப் பொறி பீச்சியடித்தது.

''யாரது?... என்னை இத்தனை துணிவுடன் கூப்பிட்டது யார்?'' கடுங் கோபத்துடன் கர்ஜித்தபோது அதன் வாயிலிருந்து தீப்பந்தமாக நெருப்பு 'குப் குப்'பென்று வழியலாயிற்று.

''நான்தான்'' என்றான் கீர்த்தி. இப்படி மொட்டையாக அவன் பேசியது இதுதான் முதல் தடவை.

''நான்தான் என்றால் யார்? இத்தனை துணிச்சலுள்ள அந்த நரனை நான் காண ஆசைப்படுகிறேன்'' என்று அந்தத் திரவமான நெருப்பிலிருந்து இன்னும் நிமிர்ந்து உயர்ந்து சுற்று முற்றும் பார்த்தது. அப்போது அதற்கு நீண்ட பரந்த இறக்கைகள் இரண்டு இருப்பதைக் கண்டான் கீர்த்தி. ''எத்தனை பெரிய பயங்கரமான இறக்கைகள்? அப்படியானால் இதனால் பறக்கவும் முடியும் போல இருக்கிறதே!'' என்று நினைத்தபோது அவன் உடல் ஒரு கணம் நடுங்கி அடங்கிற்று. அதே சமயத்தில் குரல் வந்த திசையைக் குறி வைத்துக் கொண்டு அந்த அக்கினி அரக்கன் கீர்த்தியின் அருகே பறந்து வந்து அமர்ந்து கொண்டது. அதனால் கீர்த்தியைப் பார்க்க முடியவில்லை. பார்க்க முடிந்திருந்தால் தன் அகன்ற வாயை ஒரு தடவை மூடித் திறந்து நெருப்பை உமிழ்ந்து அவனைச் சாம்பலாக்கி யிருக்கும். கீர்த்தி உருவை மறைக்கும் குல்லாவை அணிந்திருந்தது நல்லதாகப் போயிற்று. சற்றும் எதிர் பாராதபடி அது பறந்து வந்து அருகே அமர்ந்ததும் அவன் தவித்துப் போனாலும் அடுத்த விநாடியே தடதடவென்று மலையடிவாரத்தில் அருகில் போய் நின்று கொண்டு மறுபடியும் ''ஹேய்..!''என்று குரல் கொடுத்தான்.

''என்ன விஷயம்? வெறுமனே 'ஹேய், ஹேய்' என்று ஏன் அநாகரிகமாகக் கத்துகிறாய்? கௌரவமுள்ள மனிதனைக் கௌரவமான முறையில்

அமெரிக்கர்: இதோ தெரிகிறதே இருபது மாடிக் கட்டடம் அதுதான் எங்கவூர் பைத்தியக்கார ஆஸ்பத்திரி. உங்கவூரில் இதுமாதிரி இருக்காய்யா?

இந்தியர்: இல்லே, எங்கள் ஊரில் அத்தனை பைத்தியக்காரர்கள் கிடையாது.



அம்பிப்பயல்: டேய் உன் கோலி அந்தக் குழியில் விழப் பார்த்தது. நல்ல காலம் அதுக்குள்ளே எடுத்துட்டேன், இந்தா!



இங்கே நீங்களே ஒரு ஜோக் அடித்துச் சிரித்துக் கொள்ளுங்கள். மற்றவர்களும் சிரிக்க வேண்டும் என்றால் அதை எழுதி ஆசிரியருக்கு அனுப்புங்கள்.



திருடன்: ஆடாதே, அசையாதே! நில் அப்படியே...

பாங்க் காஷியர்; அடச் சீ! கொஞ்சம் நடுங்கரத்துக்காவது உரிமை கொடய்யா.

நடந்து சென்று சொல்லு. நீ யார், எங்கிருக்கிறாய்? எதற்காக வந்திருக்கிறாய்? என் கேள்விக்குப் பதில் சொல்லு'' என்றது மிருகம்.

''நான் கௌரவமான முறையில் பதில் அளிக்கிறேன். நீயும் நாணயமாக உன் இருப்பிடமான எரிமலைக் குழம்புள்ள குழிக்குப் போ''. என்றான் கீர்த்தி. அதன்படியே அது தன் இருப்பிடத்துக்குப் போயிற்று. போகும் போது அதன் நெருப்பு இறக்கைகளிலிருந்து கிளம்பிய ஜ்வாலையின் உக்கிரம் தாங்காமல் வானத்தில் வெகு உயரத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு பெரிய கழுகு கருகிக் கரிக்கட்டியாக 'க்ளிங் க்ளாங்' என்று கீர்த்தியின் அருகிலே விழுந்தது. தன் நெருப்புக் குளத்தில் போய் அது விழுந்து அதைக் கலக்கியபோது. அருகிலிருந்த மலைகள் அதிர்ந்தன. கீர்த்தி அதன் மேலாகப் பறந்தபடி அவன் (இன்னும் மறைந்தபடியேதான் இருந்தான்) ''பனி அரக்கனிடமிருந்து உனக்குச் செய்தி கொண்டு வந்திருக்கிறேன். தன்னோடு போரிடத் திராணியில்லாத பயந்தாங்குளி நீ என்கிறார் எங்கள் பனி அரக்கர்'' என்றான் உரத்த குரலில்.

''என்னோடு போரிடவா? நான் பயப்படுகிறேனாமா? யார் அந்தப் பனி அரக்கன்? எங்கே இருக்கிறான் அந்தப் 'படா' அரக்கன்?'' என்றபோது அந்த எரிமலைக் குளமே கொதித்துக் கொப்பளித்தது. திருதிருவென்று தீ ஜ்வாலையாகக் கொழுந்து விட்டு எரிந்தது. ''எவனாக இருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் சரி. அவனோடு போரிட்டு அவனைச் சாம்பலாக்குவேன். வரச் சொல் உன் பனி அரக்கனை; பஸ்மமாக்கி விடுகிறேன் என் ஒரு மூச்சினாலேயே'' என்றது அக்கினி அரக்கன்.


''சவாலை நீ ஏற்றுக் கொண்டதாக இப்போதே பனி அரக்கனிடம் போய்ச் சொல்லி அதை அழைத்து வருகிறேன்'' என்று கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினான் கீர்த்தி, பனி அரக்கனைச் சந்திக்க.

(தொடரும்)



" இங்கே வருபவர்கள் நாங்கள் சொல்வதை நம்பி வாங்கிக் கொண்டு போகிறார்கள். உங்கள் மாதிரிப் பரிசோதனை பண்ணிப் பார்ப்பதில்லை !"

சிரிக்கச் சிரிக்க! -சாமா-





வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

பிரேம் சங்கர்

முத்து என்பவன் ஏழைச் சிறுவன். ஆனால் படிக்காத மேதை. பொருள் ஈட்ட வழி தெரியாமல் வருந்திக்கொண்டிருந்தான்.

அப்பொழுது அடுத்த ஊரில் ஒரு பெரிய தனவந்தர் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வதாக நண்பன் சொல்லவே முத்து அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

தனவந்தர் பெயர் நவகோடி நாராயண செட்டியார். முத்து இருக்கும் ஊருக்கும் அவர் இருக்கும் ஊருக்கும் நடுவில் ஒரு பெரிய காடு இருந்தது. போக வர நல்ல பாதை இல்லை. கல்லும் முள்ளும் நிறைந்ததாயிருந்தது.

முத்துவுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டு இல்லை. அவன் போவது என்று முடிவு செய்து விட்டான். ஒரு பெரிய கண்ணாடிக் குடுவையில் குடிக்க நிறையத் தண்ணீர் ஊற்றி எடுத்துக்கொண்டு காட்டு வழியே பயணமானான்.

அவன் வழியில் பல இன்னல்களை அனுபவித்து முடிவில் அவர் வீட்டை அடைந்தான். வந்தவனைத் தனவந்தர் இன்முகம் காட்டி வரவேற்றார். முத்து தன் கஷ்டங்களையெல்லாம் அவரிடம் எடுத்துக்கூறித் தனக்கு ஏதாவது உதவி செய்யக் கோரினான்.

''ஐயா! என்னிடம் உழைப்பும், தந்திரமும் இருக்கின்றன. ஏதாவது ஒரு சிறு வியாபாரம் தொடங்கி அதைப் பெரிதாக விருத்தி செய்து கொண்டு நிச்சயம் முன்னுக்கு வந்துவிடுவேன். அதற்கு மூலதனம் வழங்கி ஆசீர்வதிப்பது உங்கள் கடமை!'' என்று முத்து அவரிடம் பலவாறு வேண்டினான்.

அந்நியனை முத்துவை அவர் எவ்வாறு நம்புவார்? 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்பது அவர் வகுத்துக்கொண்ட பெரியதொரு கொள்கை. அவர் முத்து சொல்வதை ஏற்றுக்கொள்ளாமல், ''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்! அதற்காகப் பெரிய மூலதனம் ஒன்றும் தேவையில்லை!'' என்று கூறிவிட்டார்.

முத்துவும் விடவில்லை. கைராசிக்காரரான அவர் மூலமாகத் துரும்பே கிடைத்தாலும் சரியே; அதையே மூலதனமாகக் கொண்டு தான் முன்னுக்கு வரத் தயாராக இருப்பதாகச் சொல்லிவிட்டான்!

அப்பொழுது அந்த வீட்டு வேலைக்காரன் எலி ஒன்றை அரைகுறையாகக் கொன்று வாசலில் தூக்கி எறிய வந்தான். தனவந்தர் சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

''முனியா! குத்துயிர் கொலை உயிராகக் கிடக்கும் அந்த எலியை முத்துவுக்கு என்னுடைய ஆசீர்வாதமாகக் கொடுத்துவிடு! எங்கே அவன் கூறியபடி முன்னுக்கு வந்து விடுகிறானா என்று பார்த்துவிடலாம்'' என்றார்.


முத்து சற்றும் கோபம் கொள்ளாமல் அந்த எலியைப் பெற்றுக்கொண்டு அவரை வணங்கி விட்டு மௌனமாக வெளியேறினான்.

சுலபமாகப் பேசிய வார்த்தைகள் எப்படிப் பளுவான பொறுப்பில் தள்ளி விடுகின்றன பார்த்தீர்களா? முத்து காடு வழியே திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது அங்கு விறகுவெட்டியின் வளர்ப்புப் பூனை பசி தாங்காமல் கத்திக் கொண்டிருந்தது.

முத்து தன்வசமிருந்த எலியை அதன் முன் போட்டுவிட்டான்! பூனையும் குதித்துக் குதித்து எலியைப் பிடித்துச் சாப்பிட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் துள்ளித் திரிய ஆரம்பித்தது.

விறகுவெட்டிக்கு முத்துவின் மேல் பிரியம் உண்டாயிற்று. கூட இருந்த





மற்ற விறகுவெட்டிகளும் முத்துவைப் பாராட்டினார்கள். "தம்பி! என்னிடம் காசு இல்லை. இந்தக் கட்டு விறகை நீ எடுத்துக் கொள்! அரை ரூபாய் தேறும்!" என்று சொல்லி ஒரு கட்டு விறகு கொடுத்து அனுப்பினான்.

முத்து தொலைவிலிருந்த தன் கிராமத்துக்கு வந்து சேர்ந்தான். விறகுக் கட்டை விற்றுவிட்டான். ஊர்க்காரக் கிழவியிடம் மோர் வாங்கிக் குடித்ததும் முத்துவுக்குச் சுகமாயிருந்தது. முத்துவுக்கு யோசனை ஓடியது. அவ்வளவு தான்! விறகு விற்ற காசைக் கொண்டு கிழவியிடம் இருந்த பூரா மோரையும் வாங்கிக் கண்ணாடிக் குடுவையில் ஊற்றி எடுத்துக் கொண்டு மீண்டும் காட்டை நோக்கி நடந்தான்.

மீண்டும் அவனைக் கண்டதும் விறகுவெட்டிகள் ஆச்சரியம் அடைந்தார்கள். முத்து எல்லோருக்கும் மோர் வழங்கினான். அவர்கள் பதிலுக்கு ஆளுக்குக் கொஞ்சம் விறகு கொடுத்தார்கள். முத்து நடையைக் கட்டினான்.

அன்றைக்கு விறகு மூன்று நான்கு ரூபாய்களுக்குப் போயிற்று.

மறு நாள் முத்து புளியம்சாதம், தயிர் சாதம், நீர் மோர் இவைகளைத் தயார் செய்து எடுத்துக் கொண்டு காட்டுக்குப் புறப்பட்டுப் போனான்.

விறகுவெட்டிகள் அவன் சேவையைப் பாராட்டினார்கள்! ஊக்கமும் கொடுத்தார்கள். விரைவில் முத்துவின் செயல் ஐம்பது, நூறு என்று புழங்க ஆரம்பித்து விட்டது!

நாளடைவில் வயதான ஒரு விறகுவெட்டியின் மகளை மணந்து கொண்டு முத்து காட்டிலேயே ஓர் உணவு விடுதியைத் திறந்தான்.

ஓய்வு நேரங்களில் முத்துவும் அவன் மனைவியும் காட்டுப் பாதையைச் சீர் திருத்த ஆரம்பித்தார்கள். இதைக் கேள்வியுற்ற பஞ்சாயத்துப் போர்டு அதை மேற்பார்வையிட்டு முத்துவுக்குச் சரியான ஊதியம் போட்டுத் தந்தது.

பிறகு அவ்வழியே பேருந்து ஒன்று வந்து போகலாயிற்று. முத்துவின் உணவு விடுதியின் முன்னால் அது சிறிது நேரம் நிற்கும்.


முத்துவுக்கு வியாபாரம் கொழுத்தது. சிறிய உணவு விடுதி பெரிய ஹோட்டலாக மாறியது. அது மட்டுமா? முத்துவுக்கு இப்பொழுது ஒரு மணிப் பயல் அல்லவா பிறந்துவிட்டான்!

முத்து ஒரு நாள் தங்கத்தில் எலியொன்றைச் செய்து எடுத்துக் கொண்டு செட்டியாரைப் பார்க்கப் போனான்.


அவன் ஆதியிலிருந்து நடந்ததையெல்லாம் செட்டியாரிடம் விவரித்துச் சொல்லிவிட்டுத் தங்க எலியை அவர் முன் சமர்ப்பித்தான்.

செட்டியார் பிரமிப்பில் ஆழ்ந்து விட்டார்.

அவர் கண்கள் இமைக்க மறந்தன. அவர் முத்துவை அன்புடன் தட்டிக் கொடுத்துத் தங்க எலியை அவனுக்கே திருப்பி அளித்து ஆசீர்வதித்து அனுப்பினார்.



தெரியுமா ?



1285. பழங்காலத்தில் துணிகளுக்குச் சாயம் ஏற்ற ஒரு வகைத் தாவரத்தைப் பயன்படுத்தி வந்தார்கள். அதன் பெயர் என்ன, சாயத்தின் நிறம் என்ன?

1286. தூக்கமில்லாமல் செய்யும் ஒரு வியாதி உண்டு. அதற்கு என்ன பெயர்?

1287. சிறுகதை, நவீனம், சரித்திரக் கதைகள், ஹாஸ்யக் கதைகள் மற்றும் அரசியல், சினிமா, சங்கீதம், நாடகம் முதலிய கலைகளைப் பற்றிய விமரிசனம், இப்படி யெல்லாத் துறைகளிலும் வல்லவராக விளங்கினார் ஒரு தமிழ் எழுத்தாளர். அவர் பத்திரிகாசிரியரும்கூட. அந்தப் புகழ்பெற்றவர் யார் தெரியுமா ?

1288. காலநிலைகளையும் காற்று அழுத்தம் பற்றியும் அறிவிக்கும் கணக்குகளையும் குறிக்க தேசப் படத்தில் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்தை இணைத்துப் பல கோடுகளைக் காணலாம். இதற்கு என்ன பெயர்?

1289. கொலம்பஸினால் 1494ல் கண்டு பிடிக்கப்பட்டு 1509ல் ஸ்பானிஷ்காரர்கள் குடியேறி 1670ல் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட ஒரு கிழக்கிந்தியத் தீவு எது ?

1290. சித்தூர ராணி அழகி பத்மினியினுடைய கணவரான மன்னரின் பெயர் தெரியுமா ?

1291. கியாஸுதீன் துக்ளக் ஷா என்ற பெயருடன் சிங்காதனம் ஏறியவரின் முதல் பெயர் என்ன? அவருடைய பெற்றோர் யார் ?

1292. புகழ்பெற்ற முகமதுபின் துக்ளக்கின் முதல் பெயர் என்ன? இவர் சிங்காதனம் எறியது எப்படி ?

1293. துக்ளக்கின் அவையில் பல காலம் தங்கிய அயல்நாட்டு யாத்திரீகரின் பெயர் தெரியுமா ?

1294. அரக்க குணம் கொண்ட கொடிய ஒருவனை அஹிம்சாவாதியாக எப்படி புத்த மதம் மாற்றியது என்பதை வலியுறுத்த ஆசோகரின் இளமையைப் பற்றிப் பயங்கரமான கட்டுக் கதை ஒன்று உலவ விடப்பட்டது. அது என்ன தெரியுமா ?

1295. கங்க வமிசத்தை ஸ்தாபித்தது யார்? இவர் எந்த மதத்தைச் சேர்ந்தவர் ?

1296. வர்ஜீனியா சர்வகலா சாலையை ஸ்தாபித்த அமெரிக்க ஜனாதிபதி யார் ?

1297. வானுலகக் காட்சிகளையும், கட்டளையையும் தாம் கேட்டதாகவும் தன் தாய்நாட்டை விரோதிகளிடமிருந்து விடுதலை பெறச் செய்ய ஒரு புனிதப் பண்டை கிளம்பப் போகிறது என்று கூறினாள் ஒரு வீராங்கனை. அவள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவள்.... அவள் பெயர் தெரியுமா ?

1298. பிரிட்டனில் குதிரைப் பந்தயங்களை நிர்வகிக்கும் கழகத்துக்கு என்ன பெயர்?


1299. மாவீரன் நெப்போலியனின் முதல் மனைவி யார் ?

1300. இந்தியாவில் முதல் சினிமாப் படமும் முதல் இந்திய மௌனப் படமும் திரையிடப்பட்டது எப்போது?


1301. சந்தோஷ் டிராஃபி எந்த ஆட்டத்துக்கு அளிக்கப்படுகிறது? யாரால், எப்போது நிறுவப்பட்டது இது?

1302. பாரதத்திலுள்ள மிகப் பெரிய ஏரி எங்குள்ளது?

தெரியுமே !




விடைகள் : 1285. தாவரத்தின் பெயர் அவுரி (இண்டிகோ) சாயத்தின் நிறம் நீலம். 1286. இன்ஸோம்னியா. 1287. பேராசிரியர் அமரர் கல்கி. 1288. இஸோபார்ஸ். (Isobars) 1289. ஜமைக்கா. 1290. ராணா ரதன் சிங். 1291. காஸிமாலிக் என்பது முதல் பெயர். பால்பன் என்ற துருக்கிய அடிமைக்கும் ஜட் வகுப்பைச் சேர்ந்த இந்துப் பெண்ணுக்கும் பிறந்தவர் இவர். 1292. முதல் பெயர் ஃபக்ருதீன் அகம்மது ஜுனகான். வங்கத்தில் வெற்றி வாகை சூடி வரும் தந்தையை வரவேற்க ஒரு பொய்யான அரங்கை அமைத்து அது தந்தையின்மீது இடிந்து விழும்படி செய்து கொன்று தான் பட்டத்துக்கு வந்தார். 1293. ஆப்பிரிக்காவைச் சேர்ந்த இபின் பதூடா. 1294. இளமையில் கொடுமையும் குரூரமும் கொண்டவராக விளங்கிய அசோகன் தன்னுடைய 99 சகோதரர்களைக் கொன்று அந்த ரத்த ஆற்றில் நீந்திச் சிங்காதனத்தைக் கைப்பற்றியதாகக் கதை. 1295. சேனாபதி புஷ்யமித்திரர். புத்தர்களை விஷமாக வெறுத்த ஹிந்து. 1296. தாமஸ் ஜெஃபர்சன். 1297. ஜோன் ஆஃப் ஆர்க். 1298. ஜாக்கி கிளப். 1299. ஜோஸஃபைன். 1300. பாரதம் கண்ட முதல் சலனப் படம் 1896ல். பாரதத்தின் முதல் மௌனப் படம் வெளியிடப்பட்டது 1913ல். 1301. பாரத மாகாணங்களுக்கிடையே நடக்கும் உதை பந்தாட்டத்துக்கு அளிக்கப்படும் கோப்பை இது. 1940ல் மன்மதநாத் ராய் சௌத்திரி அவர்கள் நினைவாக அளிக்கப்படுகிறது. 1302. காஷ்மீரிலுள்ள வுலூர் ஏரி.



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● ஸ்ரீ சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். அ[illegible]நாதன்

யூகோ பாங்கில்

இப்பொழுது உங்கள் ஃபிக்ஸெட் டிபாஸிட் 9% க்கு மேலாக பயனுடைய வட்டி பெறுகிறது



ரெக்கரிங் டிபாஸிட்டுடன்
ஃபிக்ஸெட் டிபாஸிட்டை
இணைப்பது மூலம்!

மற்ற விவரங்களுக்கு
உங்கள் அருகிலுள்ள
யூகோபாங்க் கிளையுடன்
தொடர்பு கொள்ளுங்கள்.

தாங்களே
தங்களுக்கு
உதவ மக்களுக்கு
லாபகரமாக
உதவுகிறது

யூனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-19 TAM



everest/547/PP tam